## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம், மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 பங்குனித் திங்கள் 25–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.353/2025**
CNR No. TNSA01-00898-2025

**ஜெகதீஸ்வரன்** ...வாதி.

**–எதிர்–**

**ரவீந்திரா** ...பிரதிவாதி.

இந்த வழக்கில் வாதிக்காக வழக்குரைஞர் **திரு V.பொன்முடி** அவர்கள் தோன்றினார். பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொள்ள மறுத்ததால் தோன்றாத் தரப்பினராக ஆக்கப்பட்டு எதிரவரில்லாமல் வழக்கு நடத்தப் பட்டது. இந்த வழக்கு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந் நீதிமன்றம் தீர்ப்புப் பிறப்பிக்கிறது.

## தீர்ப்புரை

### முகவுரை

வாதியிடமிருந்து 17.05.2022-ஆம் தேதியன்று பிரதிவாதி கடனுறுதிச் சீட்டுமீது வாங்கிய 3,50,000/- உரூபாயையும் 21.05.2022-ஆம் தேதியன்று கடன் ஒப்பந்தப் பத்திரம்மீது வாங்கிய 4,50,000/- உரூபாயையும் வட்டி யுடன் சேர்த்து கடன் நிலுவை 13,53,467/- உரூபாயை பின்வட்டியுடன் வசூலிக்க உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 07-ஆம்

III rd ADJ Court, Salem

வகுமுறையின் 01-ஆம் விதியின்கீழ் வாதி இந்த வழக்கைத் தொடுத்துள்ளார்.

**வழக்குரையின் சுருக்கம்**

**01.** பிரதிவாதி வாதியிடம் 17.05.2022-ஆம் தேதியன்று 3,50,000/- உரூபாயை கடனாக வாங்கிக்கொண்டு அந்தக் கடனை ஆண்டுக்கு 24% வட்டியுடன் திருப்பிக் கொடுக்க ஒப்புக்கொண்டு வாதியின் நலச்சார்பாக அன்றேக் கடனுறுதிச் சீட்டு ஒன்றை சான்றாளர்கள்முன் நிறைவேற்றிக் கொடுத்தார். பிரதிவாதி அவருடைய மனைவி பெயரில் சத்தியமங்கலம், மலையடிப்புதூர் பகுதியில் நிலம் வாங்குவதற்காக 21.05.2022-ஆம் தேதியன்று 4,50,000/- உரூபாயை பிரதிவாதி ரவீந்திராவின் வங்கிக் கணக்கு மூலம் வாதியிடமிருந்து கடனாக வாங்கிக்கொண்டு அன்றேக் கடன் ஒப்பந்தப் பத்திரம் ஒன்றை வாதியின் நலச்சார்பாக எழுதிக் கொடுத்தார். இரு கடன்களும் சேர்ந்து மொத்த கடன் 8,00,000/- உரூபாய் ஆகும்.

**02.** வாதி கொடுத்த பணத்தைக் கொண்டு 25.05.2022-ஆம் தேதியன்று பிரதிவாதியின் மனைவி சத்தியமங்கலத்தில் சொத்தை வாங்கியுள்ளார். ஒப்புக்கொண்டபடி கடனை திருபிக் கொடுக்குமாறு பிரதிவாதியிடம் வாதி பலமுறை கோரியும் அவர் அசலுக்காகவோ வட்டிக்காகவோ எந்தவொரு தொகையையும் திருப்பிக் கொடுக்கவில்லை. பிரதிவாதிக்கும் அவருடைய மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்றும் பிரதிவாதியின் மனைவியின் பெயரிலுள்ள சொத்தை விற்கப் போவதாகவும் வாதிக்கு சான்றொப்பச் சான்றாளர் சதீஷ்குமார் தகவல் சொன்னார். தன் கடனை முழுமையாக தீர்க்குமாறு 03.04.2025-ஆம் தேதியன்று வாதி

பிரதிவாதியிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் பிரதிவாதி கடனை திருப்பிச் செலுத்த மறுத்துவிட்டார். ஆகையால், இந்த வழக்கைத் தொடுப் பதைத் தவிர வேறு வழி இல்லை.

03. மொத்த கடன் 8,00,000/- உரூபாய்க்கு இந்த வழக்குத் தொடுக்கப் பட்ட நாள்வரை வட்டிக் கணக்கிட்டுக் கூட்டினால் மொத்த கடன் நிலுவை 13,53,467/- உரூபாய் வருகிறது. அந்தத் தொகையை ஆண்டுக்கு 24% வட்டியுடனும் செலவுத்தொகையுடனும் திருப்பிக் கொடுக்குமாறு பிரதிவாதிக்கு ஆணையிட வேண்டும்.

## எதிர்வழக்குரையின் சுருக்கம்

04. வழக்குமீதான அழைப்பாணையை பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்ததால் வழக்கில் தோன்றாத் தரப்பினராகிவிட்டார்.

## சான்றுகள்

05. வாதி தரப்பில் 02 சான்றாளர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். 03 சான்றாவணங்கள் குறியீடுச் செய்யப்பட்டுள்ளன.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

06. **இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

07. வாதி ஜெகதீஸ்வரன் நிரூபண ஆணையுறுதி தாக்கல்செய்து தன் தரப்பு வழக்கை வலியுறுத்தி சாட்சியம் அளித்துள்ளார். 17.05.2022-ஆம் தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு**(வா.சா.ஆ-01)** 21.05.2022-ஆம் தேதியிட்ட கடன் ஒப்பந்தம் உள்ளிட்ட 3 சான்றாவணங்களை குறியீடுச் செய்துள்ளார். இந்த

வழக்கிற்கான வழக்குரை 07.04.2025-ஆம் தேதியன்று தாக்கல்செய்யப் -பட்டிருக்கிறது. அதாவது காலவரம்புக்குள் தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது. வாதி தரப்பு வாய்மொழி சாட்சியமும் ஆவண சான்றுகளும் வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கின்றது. ஆகையால், வழக்குரையில் கோரியுள்ளபடி நிவாரணம் பெறுவதற்கு வாதி உரிமையுடையவர் என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

08. இருப்பினும் வாதி வாதி வழக்குரையில் கோரியுள்ள வட்டி விகிதத்தை வழங்க முடியாது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

09. கடன் நிலுவை 13,53,467/- உரூபாயை அசல் கடன் 8,00,000/- உரூபாய்கு இந்த வழக்கு தொடுக்கப்பட்ட நாள்முதல் தீர்ப்பாணை நாள்வரை ஆண்டுக்கு 9% பின் வட்டியுடனும் தீர்ப்பாணை நாள் முதல் தீர்ப்பாணை முழுவதும் தீர்க்கப்படும் நாள்வரை ஆண்டுக்கு 6% பின் வட்டியுடனும் வழக்கின் செலவுத்தொகையுடனும் வாதிக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்று இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது.

**இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V

Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.04.08 19:44:18 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

Hrc All court, Salem

### வாதி தரப்புச் சான்றாளர்கள்

வா.சா–01 – ஜெகதீஸ்வரன்

வா.சா–02 – சுரேஷ்

### வாதி தரப்புச் சான்றாவணங்கள்

வா.சா.ஆ–01 – 17.05.2022–ஆம் தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு அசல்

வா.சா.ஆ–02 – 21.05.2022–ஆம் தேதியிட்ட கடன் ஒப்பந்தம் – அசல்

வா.சா.ஆ–03 – மூன்றாம் நபர் ஆணையுறுதிப் பத்திரம் – அலுவலக நகல்

### பிரதிவாதி தரப்புச் சான்றாளர்கள் – இல்லை

### பிரதிவாதி தரப்புச் சான்றாவணங்கள் – இல்லை

PUGAZHENTHI V

Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.04.08 19:44:35 +0530

மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,

சேலம்.

III rd ADJ Court, Salem